அலகு 2

1. கம்பராமாயணம் - குகப்படலம்
2. இராவண காவியம் - தாய்மொழிப் படலம்
3. பெரிய புராணம் - சிறுத்தொண்ட நாயனார் புராணம்

## கம்பராமாயணம் - குகப்படலம்

SHOT ON REDMI 7
AI DUAL CAMERA

அலகு - 2

## 1. கம்பராமாயணம்

| | |
|---|---|
| ஆசிரியர் | - கம்பர் |
| சமயம் | - வைணவம் |
| காலம் | - 10ஆம் நூற்றாண்டு |
| பெரும்பிரிவு | - காண்டம்-6 |
| உட்பிரிவு | - படலம்-113 |
| பாடல் | - 10569 |
| பாட்டுடைத் தலைவன் | - இராமன் |

### குகப்படலம்

வனம் புகுந்த இராமன் குகனைத் தோழமை கொண்ட செய்தியை உணர்த்தும் பகுதியாதலின் குகப் படலம் எனப் பெயர் பெற்றது.

குகன் கையுறை ஏந்தி இராமனைக் காண வருதலும், இலக்குவன் மூலம் இராமனது அழைப்புப் பெற்று அவனைக் காணுதலும், கையுறைப் பொருளைத் தருதலும், தேனும் மீனுமாகிய அவற்றை அன்பினால் இராமன் ஏற்றுக் கொள்ளுதலும், மறுநாள் நாவாயுடன் வருக என்ற இராமன் வார்த்தையை அவனது தனிமைத் துன்பம் நோக்கிக் கசிந்த மனத்தனாய் மறுத்துக் குகன் அங்கேயே இருத்தலும் அன்றிரவெல்லாம் கண்விழித்து நின்ற குகன் காலைக் கடன் முடித்த இராமன் ஆணையின் வண்ணம் நாவாய் கொண்டு வராது இராமனைத் தன் சிருங்கி பேர நகரிலேயே தங்க வேண்டுதலும், இராமன் மீண்டும் வரும்போது குகனிடத்திற்கு வருவதாகக் கூற அதனை ஏற்று, குகன் நாவாய் கொணர, மூவரும் ஏறிக் கங்கைக் கரையைக் கடத்தலும், சித்திரகூடத்திற்கு வழி வினாவிய இராமனுக்குத் தன்னையும் உடன் கொண்டு செல்லக் குகன் வேண்ட, இராமன் குகனை அவன் குடிகளுடன் இருக்கப் பணிக்க, குகன் விடைபெற, மூவரும் வனத்துள் செல்லுதலும் ஆகிய செய்திகள் இதனுள் கூறப் பெறுகின்றன.

## குகப் படலம்

மேற்காணும் இணைப்பு புலனக் குழுவில் பதிவிடப்பட்டுள்ளது. அவற்றை படிக்க மேற்காணும் Linkகை (Ctrlயை) அழுத்திக்கொண்டு கிளிக் செய்யவும்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. கம்பராமாயணத்தில் உள்ள மொத்தப் பாடல்கள்?
2. குகப்படலம் எந்தக் காண்டத்தில் அமைந்துள்ளது?
3. குகனின் நகர் யாது?
4. ‘இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்’ யார் கூற்று?
5. குகன் இராமனுக்கு கொண்டு வந்த உணவு யாது?
6. வனம் செல்லும் பொழுது இராமனுடன் இருந்தவர்கள் யாவர்?
7. கம்பராமயணத்தின் உட்பிரிவு யாது? எத்தனை?
8. ‘நாவாய்’ என்பது யாது?

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. குகப்படலம் கூறும் செய்தி யாது?
2. குகனுக்கும் இராமனுக்கும் நடந்த உரையாடல் - விளக்குக.

### விரிவான வினா

1. இராமன் குகனைத் தோழமை கொண்ட செய்தியை விளக்குக.

# 2 இராவண காவியம் - தாய்மொழிப் படலம்



## 2. இராவண காவியம்

| | |
|---|---|
| ஆசிரியர் | - புலவர் குழந்தை |
| காலம் | - 20-ஆம் நூற்றாண்டு |
| பெரும்பிரிவு | - காண்டம்-5 |
| உட்பிரிவு | - படலம்-56 |
| பாடல் | - 2828 |
| பாட்டுடைத் தலைவன் | - இராவணன் |
| குறிப்பு | - கம்பராமாயணத்தின் எதிர்நூல் |

### தாய்மொழிப் படலம்

புலவர் குழந்தையின் இராவண காவியம் பழந்தமிழ் மரபைப் பின்பற்றி எழுதப்பட்ட காப்பியமாகும். பழைய யாப்பு மரபினைப் பின்பற்றியது. கலிவிருத்தம், கொச்சகம் முதலிய யாப்பு வகைகளால் ஆனது. இக்காப்பியம் ஐந்து காண்டங்களாகவும், 57 படலங்களாகவும் 3100 பாடல்களையும் கொண்டதாக விளங்குகிறது. அவை 1. தமிழகக் காண்டம் 2. இலங்கைக் காண்டம் 3. விந்தக் காண்டம், 4. பழிபுரி காண்டம் 5. போர்க் காண்டம்.

இந்நூலின் ஆசிரியர் புலவர் குழந்தையாவார். அவரது படைப்புகளான அரசியல் அரங்கம், நெருஞ்சிப்பழம், காமஞ்சரி, யாப்பதிகாரம், தொடையதிகாரம் போன்றவை. மேலும், பழந்தமிழ் நூல்களான திருக்குறள், தொல்காப்பியப் பொருளதிகாரம், நீதிக் களஞ்சியம் ஆகியவற்றுக்கு விளக்கவுரையும் எழுதியுள்ளார். நமது பாடப் பகுதியானது தமிழகக் காண்டத்தில் தாய்மொழிப் படலத்தில் அமைந்துள்ளது. உலகிலேயே பழைமையும் இனிமையும் பாங்குறப் பெற்ற மொழி நம் தமிழ் மொழியேயாகும். இம்மொழி மிகப் பழைமையான எழுத்திலக்கணத்தை உடையது. இத்தகைய சிறப்பு எம்மொழிக்கும் இல்லை. தமிழ் மொழிக்கே உண்டு. இத்தகைய தமிழ் மக்கள் பேசும் தமிழ் மொழியின் சிறப்பை நனிசுவையாக கீழ்வரும் பாடல்களின் மூலம் புலவர் குழந்தை புலப்படுத்துகிறார்.

இராவண காவியம்

மேற்காணும் இணைப்பு புலனக் குழுவில் பதிவிடப்பட்டுள்ளது. அவற்றை படிக்க மேற்காணும் Linkகை (Ctrlயை) அழுத்திக்கொண்டு கிளிக் செய்யவும்

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. இராவண காவியம் **ஆசிரியர்**?
2. இக்காப்பியத்தின் காலம்?
3. இக்காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
4. மொத்தப் பாடல்கள்______________?
5. ‘அ’ முதல் ______________ஈறாகிய எழுத்துகள்.
6. புலவர் குழந்தை அவர்களின் வேறு நூல்கள் யாவை?
7. எண்வகை வனப்பு ______________ வகை சுவை.
8. ‘திருமணிக் கல்னோடு உடையணிந்து உள்ளம் திகழ்ந்தனள்’– திகழ்ந்தது யார்?

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. புலவர் குழந்தை அவர்களைப் பற்றிய குறிப்புகள் வரைக.
2. தமிழின் சிறப்பை ஒன்று முதல் பத்து வரை எண்களால் புலவர் குழந்தை எவ்வாறு சிறப்பிக்கிறார்?
3. தமிழின் தொண்மையை இராவணகாவியம் எவ்வாறு விளக்குகிறது.
4. தமிழப்புலவர்களின் பெருமையை இராவண காவியம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?
5. புரவலர்களின் பெருமையை புலவர் குழந்தை எவ்வாறு விளக்குகிறார்?

## விரிவான வினாக்கள்

1. தமிழின் பெருமையை இராவண காவியம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?
2. தமிழின் பெருமை, தமிழ்ப்புரவர்களின் பெருமை, தமிழ்ப்புலவர்களின் சிறப்பு - இராவண காவியம் கொண்டு நிறுவுக.

## 3. பெரியபுராணம்



3. பெரிய புராணம்

சிறுத்தொண்ட நாயனார் புராணம்

சிறுதொண்ட நாயனார்

மேற்காணும் இணைப்பு புலனக் குழுவில் பதிவிடப்பட்டுள்ளது. அவற்றை படிக்க மேற்காணும் Linkகை (Ctrlயை) அழுத்திக்கொண்டு கிளிக் செய்யவும்

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பெரிய புராணம் இயற்றியவர் யார்?
2. சிறுத்தொண்ட நாயனாரின் இயற்பெயர் யாது?
3. பெரியபுராணம் பன்னிரு திருமுறைகயில் எத்தனாவது திருமுறையாக அமைகிறது?
4. பெரிய புராணம் சைவ இலக்கியம் சரி/தவறு
5. சிறுத்தொண்ட நாயனார் படைக்கலத் தொழில் செய்தார் சரி/தவறு

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. சிவபெருமான் சிறுத்தொண்ட நாயனாரின் பக்தியை எவ்வாறு சோதித்தார்?
2. சிறுத்தொண்ட நாயனாரின் சிவபக்தி எத்தகையது **விளக்குக**.

## விரிவான வினாக்கள்

1. பெரிய புராணம் கூறும் சிறுத்தொண்ட நாயனாரின் வரலாற்றை விவரிக்க.